ISSN : 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed

UGC CARE LIST

UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India

Volume : 07, Issue : 01/02 - March 2023

==============================================================================

# கு.சின்னப்பபாரதி நாவல்களில் பெண்பாத்திரங்களின் உளவியல்

==============================================================================

**ஆய்வாளர்,**

**பொ. பாலுசாமி,**

*முனைவர்பட்ட ஆய்வாளர்,*

*தமிழாய்வுத் துறை,*

*கந்தசாமிக் கண்டர் கல்லூரி,*

*(பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது )*

*பரமத்திவேலூர்- 638182, நாமக்கல்(Dt ).தமிழ்நாடு.*

**நெறியாளர்**

**முனைவர் பொ.வெங்கடேசன்,**

*நெறியாளர் மற்றும் உதவிப் பேராசிரியர்,*

*தமிழாய்வுத்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி,*

*பரமத்தி வேலூர் -638182, நாமக்கல் (Dt), தமிழ்நாடு.*

==============================================================================

**ஆய்வுச் சுருக்கம்.**

புனைவாகவோ,அபுனைவாகவோ படைக்கப்படும் இலக்கியங்கள் சமுதாயத்தை பிரதிபலிப்பனவாகவே உள்ளன.சமுதாயம் என்பது மனிதக் குழுக்களையும் அவர்களோடு தொடர்புடைய யாவும் அடங்கியதொன்றாகும்.இலக்கியத்தில் சமுதாய வெளிப்பாடு என்பது மனிதர்களையும் அவர் சார்ந்தவைகளையும் வெளிப்படுத்துவதாகும்.கதையிலக்கியத்தில் நிஜ மனிதர்கள் கதாபாத்திரமாக உருவெடுக்கிறார்கள். தனித்தனி மனிதர்கள்சேர்ந்தே குழுக்களாகிறார்கள்.ஒவ்வொரு தனிமனிதனும் பல அடுக்குகளைக் கொண்ட மனதாலும் தனித்தனி அடையாளங்களைக் கொண்ட உடலாலும் இயங்குகிறான்.கதையிலக்கியங்களின் பாத்திரங்களும் அவ்வாறு தனித்துவமானவைகளே.ஒவ்வொரு பாத்திரமும் நிஜ

மாந்தரைப்போல்இன்பம்,துன்பம்,அழுகை,மகிழ்ச்சி,துயரம்,பிறப்பு,குழந்தைமை,முதுமை,இறப்பு,சாதி,மொழி,மதம் ,இயக்கம்,போன்ற எல்லா கூறுகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.இக்கூறுகளே கதைக் கருவினை நகர்த்திச் செல்லும் கதைப்பின்னலாக மாற்றம் கொள்கிறது.இதனால்தான் கதையில் எஞ்சியிருப்பவைகளென நமக்கு தோன்றுவது கதாபாத்திரங்களேயாகும். இலக்கியங்களை பல்வேறு ஆய்வியல் அணுகு முறையுடன் ஆராயும் போக்கானது இலக்கியங்களைச் செம்மைப்படுத்திகாலத்தின் ஓட்டத்தில் கரைந்து போகாமல்அவற்றை நிலைநிறுத்துவதோடு அன்றி,வேண்டிய மாற்றங்களைச் சமூகத்திடம் கோருபவையாகவும் விளங்கவைக்கின்றன..அவற்றுள் 'உளவியல்அணுகுமுறை என்பதும் ஒன்றாகும்.கதாபாத்திரங்கள்கதையில்வாழும் மனிதர்களாகிறார்கள்.மனம்(உளம்)கொண்டவனே மனிதன். கதாபாத்திரங்களும்மனிதனைப்போல வேமனதுடன் படைக்கப்படுபவையாகும். மனிதன் எவ்வாறு பல அடுக்குகள் கொண்ட மனதினால் தனித்தனியன்களாக காணப்படுகிறார்களோ,அதுபோலவே கதைமாந்தர்களும் தனித்துவப் பண்புகளுடன் மனிதர்களைப் பிரதிபலிக்கிறார்கள்.இலக்கியத்தில் உளவியல் அணுகுமுறை என்பது இலக்கியத்தில் காணப்படும் கதை மாந்தர்களின் உளவியலை ஆய்வதாகும்.உளப்பகுப்பாய்வானது இலக்கியத்தில் அறிவியலின் கண்கொண்டு ஆயும் முறைகளில் முக்கியமானது. அவ்வாறான உளவியல் கோட்பாடுகளைக் கொண்டு கு.சின்னப்பபாரதியின் சங்கம்,சர்க்கரை,தாகம்,சுரங்கம்,பவளாயி ஆகிய நாவல்களில் உள்ள பெண் பாத்திரங்களின் உளவியலை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை.**

மனித குலம் எப்போதும் தன்னைச் சுற்றியுள்ள பிறரின் நடத்தைக்காண காரணங்களையும், தன்னுடைய நடத்தைக்காண காரணங்களையும் அறிய ஆர்வமாகவே இருந்து வந்துள்ளது. எனவே, மனித இயல்பை அறிய உதவும் ஓர் அறிவியல் என்று தற்காலத்தில் உளவியல் கூறப்பட்டாலும் அது மனித வரலாற்றை போல மிகப் பழமையானதும் ஆகும்!. நவீன உளவியல் மனிதனுக்கு தன் நடத்தை மற்றும் நடத்தைக்காண காரணங்களை அறியவும், அவற்றை மாற்றவும் தேவையான விளக்க அறிவை அளிக்கிறது.இலக்கியத்தில்உளப்பகுப்பாய்வு செய்வது தற்பொழுது அதற்குரிய மதிப்பை மற்றும் உயரிய இடத்தை பெற வழிவகைச்செய்கிறது.. மனித நடவடிக்கைகளுக்கு ஆழத்தில் புதைந்திருக்கும் காரணங்களை கண்டுபிடிக்க உதவும் இந்த உளப்பகுப்பாய்வு முறையில் மகிழ்ச்சியளிக்காத பல நிதர்சன உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டு விடும் அபாயம் இருப்பினும்,உண்மையை அறியவிழைவோர்க்கு இம்முறை நல்லதொரு வாய்ப்பினை வழங்குகிறது. உளப் பகுப்பாய்வு முறை என்பது அறிவியலுடன் நெருங்கிய உறவினை பெற்றுள்ள ஒன்றாகும்.ஊகங்கள்களையப்பட்ட அறிவியல் பாங்கினாலானஒரு திறனாய்வு முறையாக இலக்கியத்தில் உளப்பகுப்பாய்வு முறை விளங்குகிறது. இது படைப்பு உருவாகும் முறை, படைப்பாளி, தீர்வே இல்லாத சிக்கல்களை உடைய கதை மாந்தர்கள் போன்ற பலவற்றையும் சரியாக எடை போட மிகவும் உதவிகரமாக உள்ள ஒரு துறையாகும். இவ்வாறான உளப் பகுப்பாய்வு முறையினை கொண்டு**கு.சின்னப்பபாரதி நாவல்களில் வரும் பெண் பாத்திரங்களின் உளவியலை** பின்வருமாறு காணலாம்.

**பாத்திரப் படைப்பும் உளப்பகுப்பாய்வும்.**

நாவலின் முக்கிய கூறுகளில் ஒன்றாக பாத்திரங்கள் விளங்குகின்றன. கதாபாத்திரங்கள் இயல்பான மனிதர்களைப் போலவே மனதாலும், உடலாலும் இயங்குகின்றவையாக இருக்கின்றன.இவ்வாறு கதாபாத்திரங்களின் மன, உடல் இயக்கங்கள் சம்பவங்களாகி, கதையின் கருவைத் திரட்டித்தரும்கதைப்பின்னல்களாகிறது.ஆக,கதைப்பின்னல்,கதைமாந்தர்கள் இவைஒன்றுக்குள் ஒன்று ஊடாடிச்சென்று கதைக்கருவிற்கு உருவம் தருபவையாகிறது.

> ***“பாத்திரப் படைப்பு என்பது ஒரு பெயர்ச் சுட்டிவிடுவதோ,அங்க வர்ணனை நடந்து விடுவதோ அல்ல. மனம், அறிவு, சிந்தனை, குண இயல்பு, சூழ்நிலைகளின் போது***

***வெளிப்படும் உணர்ச்சிகள் இவற்றையெல்லாம் கூர்ந்து அறிந்து அனுபவமாக வெளியிடுவதைத் தீட்டுவதில் தான் சிறக்கிறது."(ஜெயகாந்தன்- முன்னுரை)***[1]

என்ற கூற்று பாத்திரப்படைப்பு பற்றி நமக்கொருவிளக்கத்தைக் தரவல்லதாய் உள்ளது.கோட்பாட்டை மையமாக கொண்ட ஆய்வுகளில் உளப் பகுப்பாய்வு என்பது முக்கியமான கருதுகோளாகவிளங்குகிறது.படைப்பாளனிடமிருந்து அவனது எண்ணங்கள்,அமுக்கப்பட்டவிருப்பங்கள் ஆகியவைபடைப்புகளாகி,அவை வாசகனுக்கு கடத்தப்படுகிறது. இவ்வாறு உளப் பகுப்பாய்வானது படைப்பாளனுள்ளும்,படைப்புனுள்ளும் கலந்துவிட்ட ஒன்றாகிறது. இதனை,

***"இக்கற்பனை ஆற்றல் மறை மனதிற்கும் நினைவு மனதிற்கும் ஒரு புதிய தொடர்பினை உண்டாக்கி கலை திறக்க வழி வகுக்கிறது. கலைஞன் அந்த வழியினையும், அக்கற்பனை உலகிலிருந்து மீண்டு நனவுலகிற்கு திரும்ப வரும் வழியையும் நன்கு அறிந்தவன் ஆவான். உண்மையில் கற்பனை நிலையிலிருந்து நனவுலகிற்கு திரும்பும் வழியே கலையாகப் பிறக்கிறது"(கீதாவாசன்- 25)***[2]

என்ற சிக்மண்ட் பிராய்டின் கூற்றுப்படி படைப்பிற்குள் இருக்கும் உளவியலை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.படைப்பினை உளப்பகுப்பாய்வு செய்வதென்பது பொதுவில் இயங்கும் இயல் மனிதர்களைப் போலவே படைப்புக்குள் உலவும் கதை மாந்தர்களை உளப் பகுப்பாய்வு செய்வது ஆகும். இங்கு **கு.சின்னப்பபாரதி** நாவல்களில் வரும் பெண் பாத்திரங்களான **பவளாயி,தங்கம்மாள்,பவளாயியின் தாய் ( பவளாயி ). மாரக்காள்,பழனியம்மாள்,வள்ளி (தாகம்). சம்பாதேவி,சகுந்தலா தேவி,ஜமுனாக்குமாரி (சுரங்கம்).லட்சுமி ( சர்க்கரை). திருமி (சங்கம்)** ஆகிய பாத்திரங்களின் வழி புலப்படும் உளப்பகுப்பாய்வினைப் பற்றி காணலாம்.

**பவளாயி நாவலின் பெண் பாத்திரங்களின் உளவியல்**

பவளாயி நாவலில் வரும் முதன்மை பெண் பத்திரங்களான **பவளாயி,தங்கம்மாள்** ஆகிய பாத்திரங்கள்ஒன்றிற்கொன்று முரண்படுபவையாகவும், ஒன்றுபடுவதாகவும் எனச் சில பரிணாமங்கள் தென்படுவது போல படைக்கப்பட்டுள்ளது. பவளாயியின் பால்யகால காதலையும், அதனால் உண்டான கருவையும் மறைத்து அவளது பெற்றோர்கள் பெரியண்ணனிற்கு திருமணம் செய்து வைக்கின்றனர். 11 ஆண்டுகள் கழித்து மீண்டும் பவளாயி தன் பழைய காதலன் முருகனுக்கு பணிவிடைச் செய்ய பிரிந்துச்சென்று விடுகிறார்.கணவனை இழந்த தங்கம்மாள் பெரியண்ணனின் காட்டில் வேலையாளாய்,பெரியண்ணன் நலிவுற்றிருந்த பொழுது பெரியண்ணனுக்கு துணையாகஇருக்கிறாள்.பெரியண்ணனுக்கும் தங்கம்மாளுக்கும்பழக்கம் ஏற்பட்டு கரு உண்டாகி விடுகிறது.

எது பொதுவில் தெரிந்து விடக்கூடாது என்று பவளாயியின் தாய் நினைத்தாரோ,அது தெரிந்தால் பரவாயில்லைஎன்றுபவளாயி பிரிவதற்கு காரணம் அவருள் அமுக்கப்பட்டு இருந்த அவரது பால்ய கால எண்ணங்கள் வெளிப்பிரவாகம் எடுத்ததே ஆகும்.ஒவ்வொரு பெண் உடலும் அதற்கே உண்டான தவிப்புகளும் தாகங்களும் நிறைந்ததாய் இருக்கிறது. அவருள்அடக்கப்பட்ட எண்ணங்கள்அவரது இயல்பான வாழ்வில் ஏற்பட்டதாங்கொனாத் தோல்வி என நினைத்ததே அதற்கு ஒரு மாற்று வடிகாலை தேடாமல் போனதற்கான காரணமாகும்.இதை உளவியளில் **பின்னோக்கம் (Regression)** எனவும் கொள்ளலாம்.நிகழ்காலம் சகிக்க முடியாமல் இருக்கும் போது மனிதமனம் மேற்கொள்ளும் ஒரு தப்பித்தல் முயற்சியே இது எனலாம்.தப்பித்தல் முயற்சியின் ஆதிஅவருள் அமுக்கப்பட்டபால்ய எண்ணங்களால் தான். மேலும் இதை

***"அசலானநரம்புப்பிணி தேர்வுகளில் தவிர,ஏனையவற்றில் கடந்த கால கிளர்ச்சிகள் தான்தற்காலப் பிரச்சனைகளின் காரணமாகின்றன:இரண்டாவதுஅடிப்படைக்கிளர்ச்சிகள்***

***எப்போதும் மாறாமல் ஒரே மாதிரி வெட்கக்கேடானவை,அல்லது வேதனையானவை அல்லது அச்சுறுத்துபவை; ( அந்தனி ஸ்டோர்-32)[3]***

என்றபிராய்டின் கூற்றின் வழிஉணரலாம்.

**தங்கம்மாள்** பெரியண்ணனுக்கு பணிவிடை செய்யும்போது அவருடனான உறவு தேர்வு என்பதுதன் கணவனால் கிடைத்த உடல்,பாதுகாப்பு,அன்பு (அல்லது)சமூகத்தேவை,மரியாதை போன்ற **மாஸ்லோவின்** தேவைப் படிநிலைகளை பூர்த்தி செய்யும் என்ன உந்துதல்களாக இருக்கலாம். இவ்வுறவு பொதுவெளிக்குச் செல்லும் பொழுது உடல் தேவை தாண்டிய மற்றவை மூன்றும் கிடைக்காமல் போய்விடும் என்ற எண்ணத்தில் அவர்கருவைக்கலைத்து இறந்தும் விடுகிறார்.இதனை

***"நீதா நெலகொளஞ்சி நிக்கப்போற.அது நெனச்சாதா எனக்குப் பகீர்ங்குது.அறுந்துப் போன முண்டைனு வேலியிட்டு வச்ச எல்லையே நா எதுக்காக தாண்டனனோ அதக் காப்பாத்த முடியுமே உன்னே ஐயோன்னு உட்டுட்டுப் போறதே நெனச்சாத்தா'அவள் வார்த்தை முற்றுபெறவில்லை அவன் தன் கையில் ஏந்தியிருந்த அவளின் சிரசு வெயிலில் வாடிய கீரைத்தண்டு போல் சரிந்தது" (கு.சின்னப்பபாரதி – 158)[4]***

என்ற பவளாயி நாவல் பகுதி உணர்த்துகிறது.பவளாயிபொதுவில் தெரிந்தால் பரவாயில்லை என்று நினைத்தது தங்க்மாவிற்கு தெரியக்கூடாத ஒன்றாகிறது.இரண்டும் திருமணத்தை மீறிய உறவுதான்.பவளாயினுடையது பழையது,தங்கம்மாவினுடையது புதியது.பவளாயி தன் அடக்கப்பட்ட உணர்வுளின் வளர்ச்சி அவ்வளவுதான் எனத் தெரிந்தும் துணிகிறார்,தங்கம்மாளின் உணர்வுகள் நீளக்கூடியது என அறிந்தும் மாய்கிறார்.ஆக இருவரின் உள்ள உணர்வுகள் வேறு வேறான படிநிலைகள் கொண்டது உறுதியாகிறது.

இந்த இருவரில் இருந்தும் பவளாயின் தாய் மாறுபட்டு சமூக ஒழுங்கிற்கு தன் மகளின் உணர்வுகளைத்தியாகம் செய்வதே நலன் என வலியுறுத்துபவராகவருகிறார்.அதே சமயம் அவர் சமூக ஒழுங்கை மீறவும் செய்கிறார்.மறைக்கப்பட்டதால் அது சமூகச் சட்டத்திற்கு உட்பட்டதாகிவிடுகிறது. இவ்விடத்தில் சமூகக் கட்டமைப்பின் போதாமையை நடத்தைகளை ஆராயும் உளப்பகுப்பாய்வு வெளிச்சமிட்டுக் காட்டுவதை அறியலாம்.மேலும்

***"எப்பொழுதும் சமூகத்தின் தேவைகள் எல்லாமே தனி மனித ஆசைகளுக்கு எதிராகவே இருக்கும் என்றார். அதாவது தனிமனித உள்ளுணர்வுகளைக் கட்டுப்படுத்தினால் தான்கூட்டு வாழ்வாகிய சமூக வாழ்வு சாத்தியமாகும். சமூக அமைப்பு நிலை பெறுவது தனிமனித தியாகத்தில் தான் உள்ளது" ( கீதா வாசன்- 23)[5]***

என்ற பிராய்டின் கருத்துப்படிசமூகமும்,உளவியலும் பின்னிப்பிணைந்து என்பதையும்,ஒன்றின் போதாமைக்கு மற்றொன்று தீர்வாக அமையும் என்பதையும் உணரமுடிகிறது.

**தாகம் நாவலின் பெண் பாத்திரங்களின் உளவியல்**

தாகம் நாவலில் வரும் **மாரக்காள்,பழனியம்மாள்,வள்ளி** ஆகியோர்உழைக்கும் வர்க்கத்து பெண்களாக படைக்கப்பட்டுள்ளனர்.நம் சமூகத்தில் உழைப்பிற்கும் கல்விக்கும் காத தூரம் எனவே இவர்கள் மூவரும் சமூகத்தைப் பார்த்து உணர்ந்ததே,அதன் சட்டங்களை நடைமுறைப் படுத்துபவர்கள்.கல்விப் புகா உள்ளம் சிலவேளைகளில் வெடித்தும் விடுகிறது.கோயில் வரி கட்டாத போது தன் வீட்டுக்கதவை தூக்குகையில் சண்டையிடும் மாரக்காளாகட்டும்,தன் மாமியாருடனான சண்டையில் விளக்குமாற்றுக் கட்டையால் வெளுத்து விடும் பழனியம்மாள் ஆகட்டும்.தன் குழந்தை வெய்யிலில் தவழ்ந்தபோது வயிற்றில் கொப்புளங்கள் போட்டபோது அக்குழந்தையை தூக்கச்சென்றவளை வேலைச்செய்ய முடுக்கிய பண்ணையாரை இதுவரை யாரும் எதிர்த்துப் பேசிடாத நிலையில் கண்டமேனிக்குத் திட்டிய வள்ளியாகட்டும் வீரப்பெண்களாக படைக்கப்பட்டுள்ளனர்.அதே வேளையில் மாரக்காள் தன் மகன் தாழ்ந்த சாதிப் பெண்ணை திருமணம் செய்துகொண்டபோது ஊர் உறவிற்கு பயந்து தன் மகனை ஏற்றுக்கொள்ள

அஞ்சுகிறார்.முதல் குழந்தைப் பிறந்தவுடன் ஒரு பவுன் தங்கச் சங்கிலி போடுவதாகக் கூறி அதை நிறைவேற்றாத தன் பிறந்த வீட்டாரிடம் அவர்கள் மனம் வருந்தும் படிக் கேட்டும் விடுகிறார்.இது கணவர் வீட்டாருக்கு அஞ்சிய பழனியம்மாளின் செயல்.மற்ற நேரங்களில் பண்ணையாருக்கு அஞ்சியே வள்ளி வேலைச்செய்கிறார்.இம்மூன்று நிகழ்வுகளிலும் ஒரு ஒற்றுமை உண்டு.இரண்டாம் பாலாகவே நடத்தப்பட்டாலும்,கல்வியறிவு குறைவென்றாலும் தேவைக்கேற்பஎளிதாக உணர்வுகளை நீட்டியும்,குறுக்கியும் இவர்களால் வாழ்ந்துக்காட்டிட முடிகிறது.இவர்களுக்கு உறவு,ஊர்,வேலை என வடிகால்கள் நிறைய இருப்பதே காரணமாகும்.மற்றவர்கள் அவ்வடிகால்களை ஏற்காமல் மனத்துன்பத்திற்கு ஆளாகி உடல் உபாதைக்குள்ளாகிறார்கள்.இதனை

> ***" தாய் தன் குழந்தையை தன்னின் மறுப்பதிப்பாகவே காண்கிறாள்.அவளது அன்பு சார் தேவைகளைக் (Love needs)குழந்தை நிறைவேற்றுகிறது.அவளையே முழுவதும் சார்ந்திருக்கிறது.அவள்உள்ளத்தில் பொங்கிப்பெருகும் அன்பு முழுவதையும் ஏற்றுக்கொள்ளும் வடிகாலாயிருக்கிறது." ( வ.விசயலட்சுமி- 56)[6]***

என்ற உளவியல் கருத்தைக் கொண்டு நாம் மாரக்காள்,பழனியம்மாள், வள்ளி ஆகியோரின் உளவியலைப் புரிந்துக் கொள்ளலாம்.அச்சம் கட்டுடைப்பாகும் போது வீரம் வெளிப்படுகிறது,வீரம் கட்டுப்படும் போது அச்சம் மேலோங்குகிறது.இவற்றை மடைமாற்றுவது சமூகமும்,அவர்களது நடத்தையும் என விரிந்த தளத்திற்கு இட்டுச் செல்கிறது.

**சுரங்கம் நாவலின் பெண் பாத்திரங்களின் உளவியல்**

சுரங்கம் நாவலில் **சம்பாதேவி,சகுந்தலா தேவி,ஜமுனாக்குமாரி** என்ற பாத்திரங்கள் வருகின்றன.மூவரும் வெவ்வேறு பின்னணிகளைக் கொண்டவர்களாக வருகின்றனர்.சஞ்சல் குமாரின் (சுரங்கத் தொழிலாளி)மனைவியாக வரும் சம்பாதேவி குடும்ப பாரத்தைக் குறைக்க எருமை மாடு வளர்க்கிறார்.அது திடீரென இறந்து விடுகிறது.சகுந்தலா தேவி சுரங்க முதலாளி திவாரியின் மனைவியாக வருகிறார்.கணவனின் பேச்சிற்கு மறுபேச்சு பேசமுடியாத சூழல் இவருடையது.பிகாஸ் சௌத்ரியின் அக்காவாக வருபவர் ஜமுனா குமாரி.பொதுவாழ்வேசிறந்தது என வாழும் பிகாஸ் சௌத்ரியை குடும்ப வாழ்விற்குள் இழுத்துவிடவேண்டும் என்பது இவரது நிராசை.இதில் மிகவும் ஏழை சம்பாதேவி.மாமனார்,கொழுந்தி,மகன்கள் இருவர் என மொத்தம் ஆறுபேர்களுக்கான செலவு சஞ்சல்குமார் ஒருவரின் சுரங்க ஊதியத்தில் நிறைவடைந்து விடாது,தன் இரு மகன்களும் படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குச் செல்கின்றனர்.நானும் அவர்களுக்கு ஒரு உதவியாய் இருக்கவேண்டும் என நினைத்து எருமை மாடு வளர்க்கிறார்,பயிராகும் நிலையில் அது இறந்து விடுகிறது.

> ***" பேராசை பெருநட்டமாகிவிட்டது இவள் என்னவோ கம்பெனியை விலைபேசி விடப் போவது போலல்லவா செறுக்கோடு நடந்தாள்'என்று பொறாமையால் கசப்புறப் பேசினார்கள்" (கு.சின்னப்பபாரதி- 16)[7]***

என்ற நாவலின் பகுதி அந்தத் துயரை விவரிக்கிறது. ஊரார் சொல்வது போல அவர் எண்ணியது பேராசை அல்ல. மாறாக அது ஒரு ஆளுமைப்பண்பு ஆகும்.ஆளுமைப்பண்பு பற்றி பலர் பலவாறு கருத்து கூறியிருப்பினும் அவற்றுள் சமூகம் வேண்டும் செயல்விளைவுகஅதில சிறந்த இருப்பதை ஆளுமை என ஏற்றுக்கொள்ளலாம்.இதை **சமூகத்தூண்டல் குணப் பண்புகளைக் கொண்ட ஆளுமை**என்ற வகையில் அடக்கலாம்.

> ***"சமூக வாழ்க்கையிலோ அல்லது சேர்ந்து வாழும் வாழ்க்கையிலோ ஈடுபட்டிருக்கும் மனிதர்களிடம் கற்பனை வளம் இல்லாத குறைபாடு எவ்விதமான விளைவையும் அவர்களிடம் ஏற்படுத்துவதில்லை" ( மு.இரசமாணிக்கனார்- 152)[8]***

என்ற கூற்றில் இருந்து அறியலாம். சகுந்தலா தேவியானவர் தன் கருத்து செல்லுபடி ஆகாத போதும், தன் சுற்றம் அவமானப்படுத்தப்படும் போதும் புலம்பித் தவிப்பவராகவே வருகிறார்.

*சுரங்க முதலாளியின் மனைவியாக இருந்தாலும் வீட்டில் அவர் ஒரு ஜடப்பொருளாகவே இருக்கிறார்.இதனை ஃபிராய்ட் சோர்வச்சம் என்று வரையறுக்கிறார்.இதை பகுத்தறிவிற்கு*

*ஒவ்வாத ஒன்றெனக் கூறுகிறார்.சகுந்தலா தேவி இரண்டாம் பால் மட்டுமல்ல.அவர் பொருள் (Object) அவ்வளவே.சகுந்தலாதேவி தன்னிலை உணராமலே இருப்பதுதான் இங்கு பகுத்தறிவிற்கு ஒவ்வாதது.இதனால் அவருக்குள்ளே உழன்றுக்கொண்டிருக்கிறார்.அவருக்கு அதுதான் வடிகால்.இதனை*

> ***"ஓர் ஆழ்ந்த துன்பகரமான மனவாட்டம், வெளி உலக ஆர்வம் அற்றுப்போதல், நேசிப்புத்திறன் இழப்பு, செயல் அனைத்தும் பற்றிய தடைக்கட்டு, மற்றும் சுயமதிப்பு உணர்ச்சிகள், சுயநிந்தனைகளிலும் சுய வாசவுகளிலும் வெளிப்படவும் தண்டனை பற்றிய திரிபுணர்வான எதிர்பார்ப்பில் முடிவுறவும் செய்கிற அளவு தாழ்வுறுதல்" (அந்தனி ஸ்டோர்-101)[9]***

*என்ற பிராய்டின் கூற்றானது சகுந்தலாதேவியின் உளத்தினை பிரதிபலிப்பதாக உள்ளது.செல்வச் சீமாட்டியாக இருந்தாலும்,பெண் என்பதால் அவர் தாழ்வாய் நடத்தப்பட்டு தாழ்வுமனப்பான்மையுடன் விளங்குகிறார்.***ஜமுனாக் குமாரி*** தன் தம்பியிடம் அலட்டிக் சொல்லத் தெரியாதவராகவும்,தம்பியின் போக்கில் ஆபத்துகள் அதிகம் என்பதாலும் அவரை இல் வாழ்வில்நுழைத்திடும் தாயென வருகிறார். அதை நடைமுறைப்படுத்துவதில் அவருக்கு ஒரு தடுமாற்றம் இருக்கிறது.இதற்காக அவர் சாமியாரிடம் முறையிடுகிறார்.இதுஅடக்கப்பட்ட தன் உணர்வுகளுக்கு வடிகால் தேடுவதோட ஒக்கும்*

***சர்க்கரை நாவலின் பெண் பாத்திர உளவியல்***

*சர்க்கரை நாவலில் வரும் பெண் பாத்திரமான ***லட்சுமி***உழைக்கும் வர்க்கத்துப் பெண்ணாக வந்தாலும் ஆளுமைப் பண்பு உள்ளவராகவும். புரட்சிகரமான முடிவுகளை எடுப்பவராகவும் படைத்துள்ளார்.செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்திருந்தாலும் புகுந்த வீட்டின் நிலையறிந்து அதற்கேற்ப வாழ்ந்து காட்டுகிறார்.தன் கணவன் கந்தசாமி தொழிற்சங்க போராட்டம் சிறை என்றிருக்க இவர் காட்டு வேலைக்குச்செல்கிறார்.கர்ப்பிணியாக இருந்த பொழுதும் வழியில் கிடைக்கும்சாணங்களையும்,காட்டில் கிடைக்கும் சுள்ளிகளையும் சேகரிப்பவராக இருக்கிறார்.*

*கந்தசாமி இல்லாத போது தன் வீட்டை கவனித்துக் கொண்ட வீரன் என்பவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும் அவரது குணத்தின் அடிப்படையில், அவருக்கு தன் தங்கையை திருமணம் செய்து வைக்க முடிவெடுக்கிறார். செயலை ஊரார் விரும்பவில்லையாயினும் அவர் நடத்தி முடிக்கிறார். இரண்டாம் பாலாக நடத்தப்படும் உலகில் இவர் குடும்பம் சமூகம் என எல்லாவற்றிலும் வெற்றியாளராக தெரிகிறார் இது ஒரு வகை ஆளுமை பண்பே. இதனை*

> ***"ஒரு மனிதனின் ஆளுமை பண்பைஉருவாக்கக் காரணமாக அமைவது 'நான் எனும் தன்முனைப்பு கொண்ட மனவிழைவுப்பகுதியாகும்.இப்பகுதி 'இது'எனும் பகுதியில் ஊற்றெடுக்கும் மனோ சக்தியினை தனது அமைப்புகளாக மாற்றிக் கொள்ளும் இயல்பினை உடையது. அதாவது கட்டுப்பாடின்றி இயங்கும் 'இது'வின் உந்தல்களை முறைப்படுத்தும் விழிப்புணர்வு கொண்டது இந்த மனவிழைவு" (கீதாவாசன்- 15)[10]***

*என்ற கூற்றின் வழி உணரலாம்.*

***சங்கம்நாவலில் பெண்பாத்திரங்களின் உளவியல்***

*சங்கம் நாவலில் வரும் திருமிகணவனையும் மகனையும் ஊக்கப்படுத்துபவராகவும்,தானும் குடும்பத்திற்கு உதவிகரமாக இருக்க வேண்டும் என்று பன்றி*

*வளர்க்கிறார்திருமணத்திற்கு முன்பே உறவு வைத்திருந்தவர்.திருமணத்திற்குப் பிறகு மகன் மீது உள்ள பாசத்தால் வாய்ப்புகள் வந்தாலும் தட்டிக் கழிக்கும் தாயாக படைக்கப்பட்டுள்ளார்.பிடாரியானவர் ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்கத்தை வழிபடும் இளம் பெண்ணாக வருகிறார்.தன்னைப் பெண் பார்க்க வந்தவர் இரண்டாவது திருமணம் செய்ய வந்திருக்கிறார் என்று தெரிந்து வருந்துகிறார். ஒரே நிலப் பின்புலத்தைக் கொண்ட பகுதியில் இரு வேறு சிந்தனைகள் என்பது நாவலாசிரியரின் கற்பனைத் திறனை அல்லது சமூகப் போதாமைகளை உள்ள அடக்கியமை எனலாம். சமுதாய கட்டமைப்புகள் காலம் வெளி சார்ந்ததாக இருக்கிறது. ஆனால் மனிதனின்*

*உள்ளம் அழுகை, ஏக்கம், மகிழ்வு, தூக்கம் போன்ற அனைத்து உணர்வுகளையும் கொண்டதாக விளங்குகிறது. மலைகளில் சமூக கட்டமைப்பில் தளர்வு இருப்பதும். சமவெளிகளில் அவற்றுள் இறுக்கம் இருப்பதையும் உணர முடிகிறது.இதை*

> ***"கணவனை விட்டுப் பிரியும் படியான காலச் சூழ்நிலை எத்தனையோ குறுக்கிட்டது. அத்தனையையும் அவள் இடறி ஒதுக்கித் தள்ளியே வந்தாள். எல்லாம் மகன் பொருட்டாக!. அவன் மீது கொண்ட நேச பாசத்திற்காக!. வேறு கணவனைத் தேடிக் கொண்டு விட்டாள் அவனை மறக்க வேண்டி வந்துவிடுமே என்ற வேதனைஉறுத்தலுக்காக,தாயற்றகுழந்தையாகத் தெருவில் ஏங்கித் திரியுமேஎன்ற ஏக்க வீக்கத்திற்காக. ஒருத்தியின் வேண்டாத கொடுமைக்கும் வசவுக்கும் பலியாகி வாடி வதங்க வேண்டி வருமே என்ற தாயன்பிற்காக (கு.சின்னப்பபாரதி-268-269)*** [11]

*என்ற நாவலின் பகுதிகள் நமக்கு உணர்த்துவதாவது அடக்கப்படும் உணர்வுகளுக்கு வடிகால் தேவையான ஒன்றாகிறது. வடிகால் என்பது இருமுனை கத்தி போன்றது ஆபத்தும் அதில் உண்டு. தேர்வை பொறுத்து அது சமூக ஒழுங்கிற்கு உகந்ததா. கேடானதா என்பது முடிவாகிறது.*

**முடிவுரை.**

*பெண் பாத்திரங்களின் உளவியல் என்பது ஆண் பாத்திர உளவியலிலிருந்துதனித்துவமான ஒன்றாக இருக்கிறது. ஆண்மையச்சமூகத்தில் பெண்கள் இரண்டாம் பாலாக நடத்தப்படுவது, சிக்கலுக்குள்ளானதாக மாற்றுகிறது. இவற்றுள் சாதி, வர்க்கம் போன்றவையும் தன் பங்கிற்கான வேலையை பார்த்துவிட்டு செல்கிறது.இலக்கியத்தில் பெண் பாத்திரங்களின் உளவியல் ஆனது சமூகத்தில் நிலவும் பெண்களின் உளவியலைப் போன்று சிக்கலானதாகவும், பிரச்சனைகளோடும், அதற்கான தீர்வுகளோடும் விளங்குகின்றன.*

**துணைநூற் பட்டியல்**


1 **ஜெயகாந்தன் - சில நேரங்களில் சில மனிதர்கள்- ,** *2019,* **பத்தாம் பதிப்பு, காலச்சுவடு பதிப்பகம்.***669,* **கே.பிசாலை நாகர்கோவில்.629001**

2. **கீதாவாசன் -தமிழ் இலக்கியத்தில் உளவியல்.** *2009.* **மெய்யப்பன் பதிப்பகம்.** *53,* **புதுத்தெரு . சிதம்பரம்.** *608001*

3. **அந்தனி ஸ்டோர்- ஃபிராய்ட் மிகச் சுருக்கமான அறிமுகம்.2001. அடையாளம் பதிப்பகம்** *1205,* **கருப்பூர் சாலை. புது நத்தம் சென்னை-** *621310*

4 **வ.விஜயலட்சுமி. உளவியல் நோக்கில்நாட்டுப்புறப் பாடல்கள்.** *2005.***வெற்றித்திருமகள் பதிப்பகம்.டாக்டர்.புரட்சித்தலைவிநகர்.தர்மாபுரி.புதுச்சேரி 9**

5 **மு.இராசமாணிக்கனார் - உளவியல் துறைகள்- தொகுதி** *1, 1973.* **த.பா.நி. (க.வெ) வரிசை எண் 462**

6 **கு.சின்னப்பபாரதி – பவளாயி 2005பாவை பப்ளிகேசன்.***142,* **ஜானி ஜான் கான் சாலை. இராயபேட்டை,சென்னை 600014**

7 **கு.சின்னப்ப பாரதி- சுரங்கம்.***2006* **பாரதி புத்தகாலயம்.***421* **அண்ணாசாலை, சென்னை 600018**

8 **கு.சின்னப்ப பாரதி – சங்கம் 1995செல்மா,** *2,* **சிவன்கோயில் தெற்கத்தெரு சிவகங்கை 623560**